சுருக்கம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இந்திய உணவு கழக கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு மத்திய தொகுப்பு அரிசி இயக்கம் செய்வதைக் கண்காணிக்க குறுந்தகவல் சேவை செய்திகள் (SMS) முறை அமுல்படுத்துதல் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

கூட்டுறவு, உணவு (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத் (அ1) துறை

அரசு ஆணை (நிலை) எண். 218 நாள்: 12/07/2007

படிக்க:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தலைவர்(மற்றும்) மேலாண்மை இயக்குநர் நே.மு.க.எண்.எம்.எப்7/043444./2007, நாள் 24.5.2007 (4) 26.6.2007

-----

**ஆணை:**

பொது விநியோகப் பொருட்கள் கடத்தப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு, மேற்படி பொருட்கள் கிட்டங்கிகளிலிருந்து நகர்வு செய்யப்படுவதை கண்காணிப்பது இன்றியமையானதாகும். அதன் அடிப்படையில் முதல் கட்டமாக பொது விநியோகத் திட்டத்திற்கான பொருட்கள் மத்திய உணவுக் கழக கிட்டங்கிகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கிகளுக்கு நகர்வு செய்வதை மின்னணு செய்திகள் (SMS) மூலம் கண்காணிக்கலாம் என்று அரசு முடிவு செய்தது.

2. தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 210 கிடங்குகளையும் தமிழ்நாட்டில் உள்ள இந்திய உணவு கழக கிடங்குகளில் இயக்கப்பணி மேற்கொள்ளும் 43 பிரதிநிதிகளையும் கைபேசி மூலம் ஒருங்கிணைத்து சரக்கு லாரிகள் நகர்வு பற்றி தகவல் பரிமாற்றம் செய்ய குறுந்தகவல் சேவை செய்திகள் (SMS) கைபேசி மூலம் கணினியில் பெற்று கண்காணிக்க பயன்பாட்டு மென்பொருள், குறுந்தகவல் சேகரிக்கும் சாதனம், பி.எஸ்.என்.எல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்தல் கைபேசிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கு தேவைப்படும் மூலதன செலவு மற்றும் தொடர்செலவு கீழ்க்கண்டவாறு அமையும் என இக்கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

**I மூலதனச் செலவு :–**

| | | |
|---|---|---|
| (i) | பயன்பாட்டு மென்பொருள் | ரூ. 1,71,000/– |
| (ii) | குறுந்தகவல் சேகரிக்கும் சாதனம் | ரூ. 45,000/– |
| (iii) | 253 கைபேசி செட்டுகள் செட் ஒன்றிற்கு ரூ. 1920/– வீதம் | ரூ. 4,85,760/– |
| | மொத்தம் | ரூ. 7,01,760/– |

**I. தொடர் செலவு**

தகவல் பரிமாற்றம் மாதாந்திர கட்டணம் – ரூ.6,01,128/–

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேற்படி செயற்குறிப்பினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அதனை ஏற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்துள்ளது. அதன்படி, இந்திய உணவு கழக கிடங்குகளிலிருந்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு பொது விநியோகத்திற்கான பொருட்கள் நகர்வு செய்வதை குறுந்தகவல் சேவை செய்திகள் (SMS) பரிமாற்றம் மூலம் கண்காணிக்க மேலே பத்தி 2ல் தெரிவித்தவாறு தனது நிதி ஆதாரத்திலேயே மேற்கொள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அரசு அனுமதி அளிக்கிறது. மேலும், பத்தி 2–ல் கூறிய தொடரும் செலவினத்தில் தகவல் பரிமாற்ற மாதக்கட்டணத்தில் 10% குறைத்துக்கொள்ள பி.எஸ்.என்.எல் நிறுவனத்துடன் கலந்து ஆலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் (மற்றும்) மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இத்திட்டத்தின் செயலாக்கம் குறித்து இரண்டு மாதத்திற்குள் ஓர் அறிக்கையை அரசுக்கு அனுப்பும்படி தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 42387/நிதி (கூ,உ(ம) நுபா)/2007 நாள் 04.07.2007–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சு. மச்சேந்திரநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை–10
முதன்மை ஆணையர்(மற்றும்) ஆணையர்உணவு பொருள்
வழங்கல் (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–5
மாநில கணக்காயர்(துணிக்கை), சென்னை –18
மாநில கணக்காயர்(துணிக்கை), சென்னை–18 (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்
நிதி (கூ.உ. (ம) நு. பா.) துறை, சென்னை–9
கூட்டுறவு உணவு (மற்றும்) நுகர்வோர் (டி) பாதுகாப்புத்துறை, சென்னை–9
இகோ/உதிரி

/உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், சென்னை—10
முதன்மை ஆணையர்(மற்றும்) ஆணையர்உணவு பொருள்
வழங்கல் (மற்றும்) நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை—5
மாநில கணக்காயர்(தணிக்கை), சென்னை —18
மாநில கணக்காயர்(தணிக்கை), சென்னை—18 (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்
நிதி (கூ.உ. (ம) நு. பா.) துறை, சென்னை—9
கூட்டுறவு உணவு (மற்றும்) நுகர்வோர் (டி) பாதுகாப்புத்துறை, சென்னை—9
இகோ/உதிரி

/உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.